# “எதெர இசுர” தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கு

PEOPLE'S BANK
Pride of the Nation

**1. தயாரிப்பின் தன்மை**

தனிநபர்களுக்கான வெளிநாட்டு நாணயம்

**2. வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்கள்**

2.1 கவர்ச்சிகரமான வட்டி வீதம்

2.2 புதிய வட்டி வீதத்திற்காக https://www.peoples.lk/interest-rates/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

2.3 ஏராளமான பயன்களுடன், சர்வதேச விசா அல்லது மாஸ்டர் பற்று அட்டைகள்.

2.4 கணக்கில் உள்ள பண மீதிக்கு அமைவாக சர்வதேச விசா அல்லது மாஸ்டர் கடன் அட்டை வசதிகள் இருக்கின்றன.

2.5 சேமிப்புக் கணக்கிற்காக மாதாந்த உயர் வட்டி.

2.6 உள்வரும் பண அனுப்பல் கட்டணமின்றி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

2.7 அங்கீகரிக்கப்பட்ட பரிவர்த்தனைக்காக இலகுவான வெளிச் செல்லும் பண அனுப்பல் வசதி.

2.8 தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்குகளின் மீதியின் மீது 90% வரை துரித கடன்.

2.9 தனிநபர் கடன் வசதிகள்.

2.10 குறைந்த வட்டி வீதத்தின் கீழ் வீடமைப்புக் கடன்.

2.11 இணையத்தளம் மற்றும் கையடக்க தொலைபேசி வங்கி வசதிகள் ஊடாக இலகுவான வங்கியியல் நடவடிக்கைகள்.

2.12 வங்கிக்கு இடையில் அல்லது வேறு உள்நாட்டு வங்கிகளுக்கு இடையில் பணத்தை மாற்றும் வசதி.

2.13 காப்புறுதிக் காப்பீடு (சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் 6 மாத காலம் வரை தொடர்ச்சியாக அ.டொல. 250 குறைந்தபட்ச மீதி கணக்கில் பேணப்பட வேண்டும்).

2.14 மரணம் / நிரந்தர உடல் இயலாமை நிலைக்காக ரூபா 1000,000/- வரையிலான தனிநபர் விபத்து காப்புறுதிக் காப்பீடு.

2.15 சத்திர சிகிச்சைக்காக ரூபா 100,000/- வரை மருத்துவக் காப்புறுதி.

2.16 பயணப் பொருட்களுக்கான ரூபா 50,000/- வரை இலவச காப்புறுதிக் காப்பீடு.

(கணக்கு வைத்திருப்பவரின் தகைமைக்கும் மற்றும் ஏனைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு ஏற்புடைதாகும்).

## 3. தகைமை

**3.1** பராயமடையாதோர் அடங்கலாக இலங்கையின் ஒரு தனிநபர்.

3.2 இலங்கைக்கு வெளியில் வதிகின்ற பராயமடையாதோர் உள்ளிட்ட இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரு தனிநபர்.

3.3 பராயமடையாதோர் உள்ளிட்ட இலங்கையில் வாழ்கின்ற வெளிநாட்டு நபர்.

3.4 இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள அல்லது இலங்கைக்கு வருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டு நபர்.

3.5 மரணமடைந்த நபர் ஒருவரின் ஆதனங்களின் நிருவாகம் முடிவடையும் வரை அதிகாரம் பெற்ற முகவர் ஒருவருடன் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கைப் பேணுகின்ற, மேற்படி மரணமடைந்தவரின் சொத்துக்களின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

## 4. பொது

I. தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கு (ீகுஊயுளு) சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு (மேலதிக பற்றாக்கும் வசதிகள் இல்லாமல்) அல்லது நிலையான வைப்புக் கணக்கு என்ற வகையில் அல்லது நிலையான வைப்பாக எந்தவொரு பயன்பாட்டில் உள்ள வெளிநாட்டு நாணய வகையில் திறந்து பேண முடியும். அதவது, அமெ.டொ., பிரி.பவுண், யூரோ, அவுஸ்திரேலிய டொலர், கனேடிய டொலர், ஹொங்கொங் டொலர், சிங்கப்பூர் டொலர், ஜப்பான் யென், சுவீடி' குறோனர், நியுசீலாந்து டொலர், டென்மார்க் குறோனர், நோர்வேஜியன் குறோனர், சைனிஸ் யுவான், சுவிஸ் பிரேங், தாய் பாத் மற்றும் இந்திய ரூபாய்.

II. தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்குகளை, வேறு தகைமையுள்ள ஒரு நபருடன் இணைந்த கணக்காக வைத்துக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள அல்லது இலங்கைக்கு வருகை தருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டவர் ஒருவர் இந்தக் கணக்கை இணைந்த கணக்காகத் திறந்து பேணுவதற்கு தகைமை பெற மாட்டார்.

### 4.1 கணக்கைத் திறப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய நடைமுறை

**பராயமடையாதவர் உட்பட இலங்கை நாட்டவரான தனிநபர்.**

I. முழுப் பெயர், தேசியத்துவம், முகவரி மற்றும் தொடர்பு விபரம்.

II. தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)

III. பராயமடையாதவர் எனில், பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதி.

IV. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf

V. வெளிநாட்டு கணக்குகள் வரியை (குயுவுஊயு) இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை.

VI. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**இலங்கைக்கு வெளியில் குடியிருக்கும் பராயமடையாதோர் உள்ளிட்ட இலங்கை வம்சாவளி நபர்.**

I. முழுப் பெயர், தேசியத்துவ வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.

II. கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)

III. பராயமடையாதவர் எனில், பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதி.

IV. இலங்கையிலிருந்து புறப்பட்ட திகதி.

V. பிரசாவுரிமை அல்லது வெளிநாட்டு அரசினால் வழங்கப்பட்ட அல்லது விசாவின் தன்மை.

VI. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf

VII. வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் (FATCA) சட்டத்தின் கீழ் வெளிப்படுத்துகை.

VIII. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**பராயமடையாதவர் உட்பட இலங்கை நாட்டவரல்லாத இலங்கையில் வதிகின்ற வெளிநாட்டு நபர்**

I. முழுப் பெயர், தேசியத்துவம், வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.

II. இலங்கையில் பணிபுரியும் இடத்தின் முகவரி மற்றும் பதவி, இருப்பின்.

III. தொழில் ஒப்பந்தத்தின் பிரதியொன்று மற்றும் சம்பள விபரம்.

IV. வெளிநாட்டு கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்) மற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விசா பிரதி.

V. பராயமடையாதவர் எனில், பிறப்புச் சான்றிதழின் போட்டோ பிரதி.

VI. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf

VII. வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை.

VIII. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலாவில் ஈடுபட்டுள்ள அல்லது இலங்கைக்கு வருகைதருவதற்கு எண்ணியுள்ள வெளிநாட்டு நபர்.**

I. முழுப் பெயர், தேசியத்துவம், வெளிநாட்டு முகவரி மற்றும் தொடர்பு விபரம்.

II. வெளிநாட்டு கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf
IV. வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை
V. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கைப் பேணிய மரணமடைந்த ஒருவரின் ஆதனங்களின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.**

I. முழுப் பெயர், தேசியத்துவம், முகவரி மற்றும் தொடர்பு விபரம்.
II. தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டின் பிரதி (புகைப்படம் மற்றும் விபரங்கள் அடங்கிய பக்கம்)
III. கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.
https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf
IV. வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் (FATCA) சட்டத்தின் கீழ் வெளிப்படுத்துகை.
V. நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள நிருவாகக் கடிதத்தின் அல்லது மரணசாதன அதிகாரபத்திரத்தின் பிரதி.
VI. வங்கியினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படுகின்ற ஏனைய பத்திரங்கள்.

**4.2 தேவையான குறைந்தபட்ச மீதி**

| வெளிநாட்டு நாணயம் | சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு | நிலையான வைப்புக் கணக்கு |
|---|---|---|
| அமெ.டொ. | 50/- | 1000/- |
| பிரி.பவுண் | 50/- | 750/- |
| யூரோ | 50/- | 1000/- |
| அவுஸ். டொலர் | 75/- | 1350/- |
| கனே.டொலர் | 75/- | 1300/- |
| சிங்.டொலர் | 75/- | 1500/- |
| ஜப்பான் யென் | 6,000/- | 110,000/- |
| ஹொங்.டொலர் | 400/- | 8000/- |
| நியுசீ.டொலர் | 75/- | 1500/- |
| சுவிஸ் பிரேங் | 50/- | 1000/- |
| சுவீடி.குறோனர் | 450/- | 9000/- |

| | | |
|---|---|---|
| டெனி.குறோனர் | 350/- | 6500/- |
| நோவி.குறோனர் | 450/- | 8750/- |
| சீன யுவான் | 350/- | 6750/- |
| தாய் பஹாட் | 1650/- | 33,000/- |
| இந்திய ரூபாய் | 4000/- | 80,000/- |

**4.3** a) ஆரம்ப வைப்புத் தொகையொன்று இல்லாமல் தனிநபர் வெளிநாட்டு நாணய சேமிப்பு / நடைமுறைக் கணக்கொன்றைத் திறக்க முடியும்.

b) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித செயற்பாடும் இல்லாத கணக்குகள், செயற்படா வகைக்கு மாற்றப்படும்.

c) ஒரு வருடத்திற்கு மேல் வெற்று மீதியைக் கொண்டுள்ள கணக்குகள் தானியங்கியாக மூடப்படும். ஆகவே, தமது கணக்குகளில் போதியளவு மீதியைப் பேணும்படி வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## 5. அனுமதி பெற்ற வரவு

5.1 இலங்கைக்கு வெளியிலிருந்து, வங்கி முறைமை ஊடாக கணக்கு உரிமையாளரின் பெயரில் கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி பண அனுப்பல்.

5.2 ஒரே கணக்கு உரிமையாளரின் மற்றும்/அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் (அதாவது, வாழ்க்கைத் துணை, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள்) வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.3 தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அல்லது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு வங்கி அலகில் (வெ.நா.வ.அ) பேணுகின்ற கணக்கிலிருந்து நடைமுறைப் பரிவர்த்தனைக்கு உரியதாக மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.4 இருதரப்பினரும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர்களாக இருக்கும்போது கணக்கு உரிமையாளர் யாராக இருந்தாலும் இலங்கையில் முதலீடு அல்லது சொத்துக்களை விற்பதை / கையகப்படுத்திக்கொள்ளுவதைத் தவிர்த்து, ஏனைய தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து, அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

5.5 கணக்கு உரிமையாளர் மற்றும்/அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினரால் சுற்றுலா நோக்கத்திற்காகப் பெற்றுக் கொண்டதில் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத வெளிநாட்டு நாணயம்.

5.6 வெளிநாட்டு செலாவணி அமெ.டொலர் 15,000/- அல்லது அதற்கு சமமான ஏனைய வெளிநாட்டு நாணயத்தை விஞ்சுகின்றபோது, சுங்கத்திணைக்களத்திற்கு அல்லது, செலாவணி தொகை அமெ.டொலர் 15,000Æ- அல்லது அதற்கு சமமான ஏனைய வெளிநாட்டு நாணயத்திற்குக் குறைகின்றபோது, வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த வெளிப்படுத்தலின் மீது கணக்கு உரிமையாளர் இலங்கைக்குக் கொண்டு வந்த வெளிநாட்டு செலாவணி.

5.7 கணக்கு உரிமையாளரின் அல்லது அவருடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் வெளிநாட்டு பயண அட்டையில் (FTC) பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளாமல் எஞ்சியுள்ள அக் கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கின் மூலம் வழங்கப்பட்டுள்ள பணம் வரையிலான மீதி.

5.8 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (BFCA) உள்வரும் முதலீட்டு கணக்கிலிருந்து (IIA) அல்லது அக் கணக்கு உரிமையாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

5.9 பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவது சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபரின் இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (DFCA) பண மாற்றல் செய்தல்.

5.10 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு முதலீட்டு கணக்கில் பற்று வைத்ததன் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தால், இலங்கை அபிவிருத்தி முறிகளில் (இல.அ.மு) வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்து கிடைத்த கூப்பன் வருமானம், விற்பனை / முதிர்வடையும் வருமானம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பெறுகைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்.

5.11 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் பற்று வைத்ததன் மூலம் அல்லது அக் கணக்கிலிருந்து வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிற்கு (OIA) மாற்றப்பட்ட பணத்தை, பங்களிப்பு விகிதாசாரத்திற்கு உரியதாக, பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய முதலீட்டை மேற்கொண்டுள்ள வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிலிருந்து கிடைக்கும் எந்தவொரு வருமானத்தை அல்லது மூலதன வருமானத்தை மீள் வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிலிருந்து மாற்றுதல்.

5.12 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு முதலீட்டு கணக்கில் பற்று வைத்ததன் மூலம் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், வேறொரு நபரின் (அதாவது கொள்வனவாளரின்) வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிலிருந்து வெளிநாடுகளில் அனுமதி பெற்ற முதலீடுகளை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தை அத்தகைய வாடிக்கையாளருக்கு மாற்றுதல்.

5.13 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதியும் வெளிநாட்டவராக இருப்பின் அல்லது இலங்கையிலிருந்து

வெளியேறும் குடியகல்பவராக (ஆரம்பத்தில் அல்லது பின்னர்) இருப்பின், தகைமை பெற்ற புலம்பெயர் கொடுப்பனவு மற்றும் இலங்கையில் நடமாடும் வருமானம் என்பவற்றை ''மூலதன பரிவர்த்தனை ரூபாய் கணக்கிற்கு'' (CTRA) அல்லது குடியகல்பவர்களின் பணம் அனுப்பும் வருமான கணக்கு கணக்கு (ERIA) உரிமையாளருக்கு இருப்பின், அதற்கு மாற்றுதல்.

5.14 கணக்கு உரிமையாளர் இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் வதியும் வெளிநாட்டவராக (பராயமடையாதோர் உட்பட) இருப்பின், 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட ''மூலதன பரிவர்த்தனை ரூபாய்க் கணக்கு'' சம்பந்தமாக 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க அறிவுறுத்தல் தொடரின் 5(உ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அனுமதி பெற்ற பற்று வைத்தலுக்காகப் பணத்தை மாற்றுதல்.

5.15 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டவராக அல்லது இரட்டைக் குடியுரிமை பெற்றவராக இலங்கையில் தொழிலொன்றில் ஈடுபட்டுள்ளபோது, வியாபார வெளிநாட்டு நாணய கணக்குகளிலிருந்து, வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்குகளிலிருந்து, தொழில் தருநரின் இலங்கை ரூபாய் கணக்குகளிலிருந்து பணத்தை மாற்றுதல் அல்லது ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் அல்லது சம்பளம், தொழில் மற்றும் ஓய்வுகால பயன்கள் என்பவை சம்பந்தமாக தொழில் ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்தவொரு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது அத்தகைய ஊழியர் ஒருவருக்குச் செலுத்தப்படவிருக்கும் எந்தவொரு செலுத்தீடு.

5.16 மரணமடைந்த நபர் ஒருவரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல். மேற் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி பந்தியில் 3.5இன் கீழ் தகைமையைப் பூர்த்தி செய்துள்ளபடி, கணக்கு உரிமையாளர் அத்தகைய மரணமடைந்த நபரின் சொத்தின் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக அல்லது நிருவாகியாக அல்லது மரணசாதனகாரராக இருப்பார்.

5.17 தற்பொழுது இருக்கின்ற ஒரு கணக்கில், கணக்கு உரிமையாளர் பயன் பெறுநராக பெயர் குறித்து நியமிக்கப்பட்டு இலங்கையில் வதிபவராக இருக்கும்போது மரணமடைந்த நபரின் சொத்துக்கள் சம்பந்தமான நிருவாகியாக அல்லது நிறைவேற்றுநரின் அல்லது கம்பனியொன்றின் ஒழிக்குநரின் உள்வரும் முதலீட்டு கணக்கொன்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.18 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வெளிநாட்டு தொழில் தருநருக்கு சேவை வழங்குவதில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பிரசையாக இருந்தால், வெளிநாட்டு தொழில் தருநருடன் சம்பளம் மற்றும் Æஉழைப்பை கணக்கு உரிமையாளருக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனியின் வியாபார, வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

5.19 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பல்/விமான கம்பனிக்குச் சொந்தமான கப்பல் ஒன்றில் / விமானம் ஒன்றில் வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற இலங்கை பிரசையாக இருப்பின், பணியாட் தொகுதி சம்பளம் / ஊதியம் என்பவற்றுடன் ஏனைய சம்பந்தப்பட்ட தொழில் மற்றும் ஓய்வூதிய பயன்கள் சம்பந்தமாக, வியாபார, வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அல்லது அத்தகைய உள்நாட்டு கப்பல்/விமான கம்பனியின் (அதாவது தொழில் தருநர்) வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிலிருந்து பணத்தை மாற்றுதல்.

5.20 விசேட வைப்புகள் கணக்கிற்கு (ழனுயுள) ஏற்புடையதான வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் (குநுயு) கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கு அமைவாக, கணக்கு உரிமையாளரால் திறக்கப்பட்டு பேணப்படுகின்ற விசேட வைப்புகள் கணக்கிற்கு (ழனுயு) உரிய வட்டி உட்பட முதிர்வடையும் போது கிடைக்கின்ற வருமானம்.

5.21 கணக்கில் உள்ள பணத்தின் மீது வெளிநாட்டு நாணயத்தில் ஈட்டிக் கொண்ட வட்டி.

## 6. அனுமதி பெற்ற பற்று

6.1 கணக்கு உரிமையாளரின் மற்றும் / அல்லது இலங்கையில் வதிகின்ற நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் நடமாடும் பரிவத்தனை சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.2 இலங்கையில் வதிகின்ற நபராக கணக்கு உரிமையாளரின் மூலதன பரிவர்த்தனை சம்பந்தமாக இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.3 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்றவராக இருக்கும்போது எந்தவொரு நடவடிக்கைக்காகவும் இலங்கைக்கு வெளியில் மேற்கொள்ளப்பட்ட வெளிச் செல்லும் பண அனுப்பல்.

6.4 இலங்கையில் இலங்கை ரூபாவில் பணம் வழங்குதல்.

6.5 அந்தக் கணக்கு உரிமையாளரின் மற்றும்/அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

6.6 வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது அந்தக் கணக்கு உரிமையாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு மேற்கொள்ளப்படும் மாற்றல்.

6.7 பரிவர்த்தனைக்கு உரியதாக இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர் ஒருவரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு பணம் மாற்றுதல்.

6.8 கணக்கு உரிமையாளர் எவராக இருந்தாலும், இரு தரப்பினரும் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற நபர்களாக இருக்கின்றபோது, இலங்கையில் முதலீடு அல்லது சொத்துக்களைக் கையகப்படுத்திக் கொள்ளும் நோக்கத்தைத் தவிர்த்து, ஏனைய தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு மாற்றுதல்.

6.9 கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கில் உள்ள பணத்தைப் பயன்படுத்தி இலங்கை அபிவிருத்தி முறிகளில் வெளிநாட்டு நாணயத்தில் முதலீடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் செலுத்தீடுகள்.

6.10 வெளிநாடுகளில் அனுமதி பெற்ற முதலீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக அந்த வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கின் ஊடாக விற்பனை செய்பவராலேயே செலுத்தீடுகள் மேற்கொள்ளப்பட்ட பணம் வேறொரு நபரின் (அதாவது விற்பனையாளரின்) வெளிச் செல்லும் முதலீட்டுக் கணக்கிற்கு மாற்றுதல்.

6.11 நடமாடும் பரிவர்த்தனை சம்பந்தமாக வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக கணக்கு உரிமையாளரின் மற்றும்Æஅல்லது அவரது நெருங்கிய குடும்ப அங்கத்தினர்களின் (ஒரு நபருக்கு) பயண நடவடிக்கைகளுக்காக பதிவேற்றுவதற்காக பணம் வரவு வைத்தல் அல்லது வெளிநாட்டு நாணய தாள்களில் அமெ.டொ.5000Æ- அல்லது அதற்குரிய விகிதாசாரத்தில் ஏனைய எந்தவொரு பண வகையில் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

6.12 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட இலங்கை மத்திய வங்கியின் 2021ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, வெளிநாடுகளில் சேவையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களுக்கு (குடியகன்றவர்களைத் தவிர்த்து) கடன் மற்றும் முற்பணம் வழங்குவது சம்பந்தமாக கணக்கு உரிமையாளரால் பெறப்பட்ட கடனை மீளச் செலுத்துதல் / கடன் சேவைக்காக பணத்தை மாற்றுதல்.

6.13 இரட்டை பிரசாவுரிமை மீது மற்றும் வேறொரு நாட்டில் நிரந்தரமாக வதிவதற்காக விசா மீது இலங்கைக்கு வெளியில் வதிகின்ற இலங்கையர்கள் 2021 மார்ச் 18ஆம் திகதியிட்ட 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அறிவுறுத்தல்களுக்கு அமைவாகப் பெற்றுக் கொண்ட இலங்கை ரூபா கடனை (இல.ரூ.க) அல்லது வெளிநாட்டு நாணய கடனை (வெ.நா.க) மீளச் செலுத்துவதற்காகÆகடன் சேவைக்காக மேற்கொள்ளப்படும் பண மாற்றல்.

6.14 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்ற, இலங்கையில் தற்காலிகமாக சுற்றுலா மேற்கொள்ளுகின்ற

வெளிநாட்டவராக இருக்கும்போது, வெளிநாட்டு நாணயத்தில் பணம் மீளப் பெற்றுக்கொள்ளுதல்.

6.15 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் வதிகின்றவராக அல்லது இலங்கையில் வதியும் வெளிநாட்டவராக இருக்கும்போது, அக் கணக்கு உரிமையாளரின் உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

6.16 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டவராக அல்லது இலங்கையில் தொழிலில் ஈடுபட்டுள்ள இரட்டை பிரசாவுரிமை பெற்றுள்ளவராக இருக்கும்போது, வியாபார வெளிநாட்டு நாணய கணக்கு, வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கு அல்லது தொழில் தருநரின் இலங்கை ரூபா கணக்குகளுக்கு சம்பளம் அதிகமாக செலுத்துதல், தொழில் மற்றும் ஓய்வூதிய பயன்கள் அல்லது அத்தகைய எந்தவொரு தொழில் தருநருக்குச் செலுத்த வேண்டிய வேறு எந்தவொரு செலுத்தீடு.

6.17 கணக்கு உரிமையாளர் உள்நாட்டு கப்பல்/விமான கம்பனிக்குச் சொந்தமான கப்பலில்/விமானத்தில் வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற இலங்கைப் பிரசையாக இருக்கும்போது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு பணத்தை மாற்றுதல் அல்லது அத்தகைய உள்நாட்டு கப்பல்/விமான கம்பனியின் (அதாவது தொழில் தருநர்), வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிற்கு பணியாட் தொகுதியினரின் சம்பளம்/ஊதியம் மற்றும் அத்தகைய தொழில் தருநருக்காக கூடுதலாகச் செலுத்தப்பட்ட செலுத்தீடு.

6.18 கணக்கு உரிமையாளர் வெளிநாட்டில் தொழில் புரிகின்ற இலங்கைப் பிரசையாக இருக்கும் போது, கணக்கு உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயம் பெயர் குறிக்கப்பட்ட வீடமைப்பு கடனைப் பாதுகாப்பதற்காக வழங்கப்படுகின்ற காப்புறுதி பத்திரம் சம்பந்தமான காப்புறுதி செலுத்தீட்டுக்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குறுத்தும் ஆணைக்குழு (இ.கா.ஒ.ஆ) வினால் ஒழுங்குமுறைப்படுதத்தும் காப்புறுதி கம்பனிகளின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு மாற்றுதல்.

6.19 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் 8(3)வது பிரிவின் பிரகாரம், கணக்கு உரிமையாளரின் எந்தவொரு நடவடிக்கைக்காக இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள அத்தகைய வெளிச் செல்லும் பண அனுப்பல்.

## 7. கட்டணம் மற்றும் அறவீடு

விகிதாசார மற்றும் வரி அறவிடலுக்காக கீழுள்ள இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

**https://www.peoplesbank.lk/roastoth/2024/10/Foreign-English.pdf**